6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வரி விதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு 1984

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வரிவிதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேறப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

7. அறிவிப்பு.

மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்து கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1984) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS